இணைப்பு–VI

(229ஆம் பக்கத்தில் உள்ள அடிக்குறிப்பைக் காண்க.)

எழுதுபொருள் மற்றும் அச்சுத்துறை

அறிவிப்புகள், 2010–2011

அறிவிப்பு 1

எழுதுபொருள் மற்றும் அச்சுத் துறையில் தொழிலாளர்களின் பாதுகாப்பு நலன் கருதி, அரசு அச்சக தொழிற்கூடத்தில் பணிபுரியும் ஆண், பெண் இருபால் தொழிலாளர்களுக்கும் காலணிகள் வழங்கப்படும்.

அறிவிப்பு 2

எழுதுபொருள் மற்றும் அச்சுத் துறையின் தேய்மான காப்பு நிதியில் இருப்பில் உள்ள தொகையிலிருந்து அரசு கிளை அச்சகம், சேலத்திற்கு இரண்டு யூனிட் வெப் ஆப்செட் இயந்திரம் ஒன்றினை ரூ.95.00 இலட்சம் மதிப்பில் கொள்முதல் செய்து வழங்கப்படும்.

அறிவிப்பு 3

எழுதுபொருள் மற்றும் அச்சுத் துறையின் தேய்மான காப்பு நிதியில் இருப்பில் உள்ள தொகையிலிருந்து அரசு கிளை அச்சகம், மதுரைக்கு உறை வெட்டும் கத்திகள் மற்றும் தானியங்கி உறை மடிக்கும் (ம) பசை ஒட்டும் இயந்திரம் ரூ.20.00 இலட்சம் மதிப்பில் கொள்முதல் செய்து வழங்கப்படும்.

அறிவிப்பு 4

எழுதுபொருள் மற்றும் அச்சுத் துறையில் மின் ஆளுமையின்கீழ் ஒருங்கிணைக்கும் விதமாக, இயக்ககத்திற்கு 5 கணினிகளையும் 2 லேசர் பிரின்டர்களையும், அரசு மைய அச்சகத்திற்கு 5 கணினிகளையும், அரசு எழுதுபொருள் அலுவலகத்திற்கு 2 கணினிகளையும், சென்னை உயர் நீதிமன்ற கிளை அச்சகத்திற்கு 2 கணினிகளையும், 1 லேசர் பிரின்டரையும், அரசு கிளை அச்சகங்களான மதுரைக்கு 2 கணினிகளையும் 1 லேசர் பிரின்டரையும், சேலத்திற்து 2 கணினிகளையும், விருத்தாசலத்திற்கு

2010 மே 11]

2 கணினிகளையும், புதுக்கோட்டைக்கு 2 கணினிகளையும், 1 லேசர் பிரின்டரையும் திருச்சிக்கு 2 கணினிகளையும், உயர்நீதி மன்ற மதுரை கிளை, மதுரைக்கு 2 கணினிகளையும் நிறுவிட ரூ.11.10 இலட்சம் நிதி வழங்கப்படும்.

அறிவிப்பு 5

எழுதுபொருள் மற்றும் அச்சுத் துறையில் இருபுறமும் நகலெடுக்கும் திறன் கொண்ட, கணினிகளுடன் இணைத்துப் பிரின்டராகவும் ஸ்கேனராகவும் பயன்படுத்தக்கூடிய ஒளி நகலியை, இயக்ககம், அரசு எழுதுபொருள் அலுவலகம், சென்னை உயர் நீதிமன்ற கிளை அச்சகம், அரசு கிளை அச்சகம், விருத்தாசலம் ஆகியவற்றிற்கு தலா ஒன்று நிறுவிட ரூ.4.80 இலட்சம் நிதி வழங்கப்படும்.

அறிவிப்பு 6

எழுதுபொருள் மற்றும் அச்சுத் துறையில் பணியாற்றும் பணியாளர்களின் நலன் கருதி அனைத்து பருவகாலங்களிலும் சுத்திகரிக்கப்பட்ட சுடுநீர் மற்றும் குளிர்ந்த நீர் வழங்கும் கருவியை, அரசு மைய அச்சகத்திற்கு 2 எண்ணிக்கையும், இயக்கம், அரசு எழுதுபொருள் அலுவலகம், சென்னை உயர் நீதி மன்ற கிளை அச்சகம், மதுரை, சேலம், விருத்தாசலம், புதுக்கோட்டை, திருச்சி, உயர் நீதிமன்ற மதுரை கிளை ஆகிய கிளை அச்சகங்களுக்கு தலா ஒன்று நிறுவிட ரூ.2.95 இலட்சம் நிதி வழங்கப்படும்.

அறிவிப்பு 7

எழுதுபொருள் மற்றும் அச்சுத் துறை இயக்ககத்திற்கு அலுவலர் கூட்டங்களில் பவர் பாயிண்ட் பிரசன்டேசன் வாயிலாக தகவல்களைப் பரிமாறும் பொருட்டு புரொஜக்டர் மற்றும் உபகரணங்கள் ஒன்றினையும் நிறுவிட மொத்தம் ரூ.1.00 இலட்சம் நிதி வழங்கப்படும்.

அறிவிப்பு 8

எழுதுபொருள் மற்றும் அச்சுத் துறையின் அரசு மைய அச்சகத்தில் அதிமுக்கியத்துவம் மற்றும் அதிரகசிய தன்மை வாய்ந்த அச்சுப் பணிகள் மேற்கொள்ளப்படும்போது அரசு மைய அச்சக பாதுகாப்பு நடவடிக்கைகளை மேம்படுத்திட கண்காணிப்புக் கேமிரா ஒன்றினை நிறுவிட ரூ.2.00 இலட்சம் நிதி வழங்கப்படும்.

[2010 மே 11

அறிவிப்பு 9

எழுதுபொருள் மற்றும் அச்சுத் துறையில் அச்சகத் தொழிலாளர்களின் வருகையினைத் துல்லியமாக பதிவு செய்திட கைரேகை பதிக்கக்கூடிய நவீன காலங்குறிக்கும் இயந்திரத்தினை, அரசு மைய அச்சகத்திற்கு 2 எண்ணிக்கையும், சென்னை உயர் நீதிமன்ற கிளை அச்சகம், மதுரை, சேலம், விருத்தாசலம், புதுக்கோட்டை, திருச்சி, உயர் நீதிமன்ற மதுரை கிளை ஆகிய கிளை அச்சகங்களுக்கு தலா ஒன்றும் நிறுவிட ரூ.2.50 இலட்சம் நிதி வழங்கப்படும்.

அறிவிப்பு 10

எழுதுபொருள் மற்றும் அச்சுத் துறையின் அரசு மைய அச்சகம் மற்றும் அரசு எழுதுபொருள் அலுவலகத்திற்கும் குறைந்த ஆள் பலத்தினைக் கொண்டு அதிக அளவிலான காகித ரீல்களை லாரியிலிருந்து இறக்கவும், ஏற்றவும், காகிதக் கிடங்கில் அடுக்கவும் உபயோகப்படுத்தத்தக்க வகையில் பளு தூக்கி இயந்திரம் தலா ஒன்றினை நிறுவிட ரூ.16.00 இலட்சம் நிதி வழங்கப்படும்.

அறிவிப்பு 11

எழுதுபொருள் மற்றும் அச்சுத் துறையின் அரசு மைய அச்சகத்தில் குறைந்த பணியாளர்களைக் கொண்டு குறுகிய காலத்தில் பல வண்ணத்தில் அச்சிடப்பட வேண்டிய இனங்களை அரசு மைய அச்சகத்திலேயே அச்சிடும் விதத்தில் மின்னணு அச்சு இயந்திரம் ஒன்றினை நிறுவிட ரூ.40.00 இலட்சம் நிதி வழங்கப்படும்.

அறிவிப்பு 12

எழுதுபொருள் மற்றும் அச்சுத் துறையின் அரசு மைய அச்சகத்தில் நிலையான மற்றும் வழக்கத்தில் இல்லாத அளவுகளிலான தரமான காகித உறைகளை வெகு விரைவில் மடித்து, பசை ஒட்டி அதிக அளவில் உற்பத்தி செய்திட தானியங்கி உறை மடிக்கும் மற்றும் பசை ஒட்டும் இயந்திரம் ஒன்றினை நிறுவிட ரூ.15.30 இலட்சம் நிதி வழங்கப்படும்.

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
சட்டமன்றப் பேரவை
TRUTH ALONE TRIUMPHS
வாய்மையே வெல்லும்